உ

சிவமயம்.



கதிரேசன்பேரில்

ஆனந்தக் களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னெங்கரன்காப்பதாம்

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னனா—தந்த
தானா தனா தந்த னாதந்த னனா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென்னாளும் க

பார்புகழ வேதுதி சிறக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள்பெருக்க உ

சதுர்மறையும்புகழ்தேவ ரிங்கே-வந்து
தானவாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯
இதிலேநீடேரவாதுசித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சியபதவியிலேமுத்தி ௪௰
கோலமாலையழகைப் பாரும்-குதிரை
குமரேசனருளாலே வல்வினைகளுந்தீரும் ௪௧
மூலகணபதிக்கிளையவாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨
மாமேவும்புலிகழுந்தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு லளவிடமாட்டான் ௪௩
பூமேவுங்குழல்வள்ளிநேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்குந்நாயன் ௪௪
பச்சைமால்தனக்குமருகோனே-சுவாமி
பழனிமலைமீதிலே மேவுமுருகோனே ௪௫
வச்சிராயுதன்தம்பிமருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தரவேணுமுருகா ௪௬
நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭
நவமணியணிந்தவொளிமூவர்-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௪௮
கனகுண்டலமிட்டநீதா-சுவாமி
கார்த்திகேயாலட்ச படைவீரர்தானே ௪௯
தனமேருபாக்கியமருள்வேலா-எங்கும்
சர்வபரிபூரணானந்த சிவபாலா ௫௰
ஓராருமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧
ஈராறுபன்னிருகையாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨
ஆண்டிபொன்னாண்டிசிவனாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩
ஆண்டிமகனாண்டியிவனாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪
சிக்கல்புரவச்சேரியாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடி குன்றெக்குடியாண்டி ௫௫
மிகத்திருவேரகத்தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலை விராலிமாலை சென்னிமலையாண்டி ருஎ

வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ருஅ

விடவரவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென்ன கெஜமுமசைபடவும் ருகூ

கடல்சுவரகதிர்மதி கலங்க-தரவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க சா0

மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா சாக

சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவிலேமுன்னும் சாஉ

ஆகவேநின்றபர நாதாஎன்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா சாங

தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயென்று கண்ணெதிரேதோண சாச

அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் சாரு

அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசக்தி மைந்தாநமாவோம் சாசா

அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் சாஎ

அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் சாஅ

மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் சாகூ

மயிலேறுங்கந்தாநமா வோம்-வட்ட
வடவாலில் மேவுமால் மருகாநமாவோம் எ0

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் எக

மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் எஉ

திரிபுரபவாவா நமாவோம்-வாலை
சேயனேதிகலொளி பவாவாநமாவோம் எங

பரிபுரபவா நமாவோம்-வள்ளி
பாகனேபவனொழி பவாவாநமாவோம் எச

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியே சயலொழி பவாவாநமாவோம் ௭௫

தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை ௭௬

காவாவுன்னீரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னை ௭௭

வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ ௭௮

தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு ௭௯

அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம் மாண்டநாயகனே ௮௰

உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும் ௮௧

அன்புபெரும்வரைராஜன் பேரா-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே ௮௩

எவன்றேடினாலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக்கவிபாடி னாலும்பாடட்டும் ௮௪

நமக்கென்னவென் றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ ௮௫

உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது ௮௬

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே ௮௭

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் ௮௮

தவயோகக்காரர்வெகு வெள்ளம் ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் ௮௯

அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ ௯௰

அன்னைவயளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ ௯௧

என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கியாளாக வென்னையுமேசேர்த்து ௯௨

ஆளாக்கி யாள லாகாதோ - எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ ௯௩

பாழான மனங்குவியு திலையோ - யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையோ ௯௪

வஞ்சக மில்லாமலே கண்பாரும் - முடிவில்
மறலியுட தூதரெனை வருத்தாமல்க்காரும் ௯௫

அஞ்சுதலை யாருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்ததுவுஞ் சிறியே ௯௬

ஆறுதலை யண்டண்டரய்யா - பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யோ ௯௭

ஆறுபடை வீட்டுக்கதிகாரா - வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா ௯௮

சத்தியுமை பாலகனே சாமி - எந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதற்கேகமி ௯௯

சுத்தபரி பூரணு வுன்னை - ஓதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௱

பொய்யாத வாழ்வருள வேலா - கதிரை
ஐயாவே யென்னையாளுந் தேவாதிதேவா ௱௧

ஒப்யார மானமுரு கோனே - வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனுனே ௱௨

உரமான வசுரரிடாலே - தேவ
ரோடிமுறையிட்டாரே கைலைமலைமேலே ௱௩

அரனசுரர் மேல்க்கோப மாகி கைலை
யாளிவிழி தனிலேயொரு பொறிசிதறி யேகி ௱௪

சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௱௫

உருவாகி மலர்மீதி லானூர்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள்மகனூர் ௱௬

அப்பவே சென்னியோ ராறுய்-மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராறுய் ௱௭

உற்பவ மானமணி ரண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டு ௰௮

அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னாறுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௱௯

கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னுலவர்கள் கருவறுத்தாரே ௱௧௦
தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன் ௱௧௧
தென்கதிரை மானக ரிலங்கும் சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் ௱௧௨
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன் ௱௧௩
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௱௧௪
கடகமெனு மான திங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே ௱௧௫
கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய யிருபுறமு மருகேதயங்க ௱௧௬
செங்காவிப் பட்டாலே கோடிகொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி ௱௧௭
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௱௧௮
சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத ௱௧௯
பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வாகரா வென்றுபுகழ்பெறவே ௱௨௦
ஆணிப்பொன் மாலைக ளிலங்க மொய்த்த
அழகானவாலாத்தி தீபமே துலங்க ௱௨௧
மாணிக்கப் பேழையி லுகந்தார்—கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார் ௱௨௨
மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும் ௱௨௩
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்திரு வாபரணஞ்சாத்தி ௱௨௪
கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று ௱௨௫
சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி ௱௨௬
வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்து ரோடி ௱௨௭

கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து ௱௨௮

புள்ளிமயில் வேலர் விரைவாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குளேக ௱௨௯

வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௱௩௦

சித்ரமணி மலரணையில்த் தாவி-நல்ல
செங்கமல காத்தா லணைத்திலர்கள் மேவி ௱௩௧

கொத்துமுத்து நத்துவளை திருத்தி - யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள் பொருத்தி ௱௩௨

இங்கிர்த மணாளகுண நீதா — யெனக்கு
யினியசுக போகமத லீலாவினோதா ௧௩௩

எங்கள்குலம் விளங்கவந்த நேசா - சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௧௩௪

அத்தைபெற்ற முத்தேயெங் கோனே - யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயம்மானே ௧௩௫

முத்திரையிட் டிலங்குகொங்கை யாலே - வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௧௩௬

கலந்தணைந்த சுகந்தமண வாசன் - எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௧௩௭

சலதரத்தைப் பழித்தகுழ லாளே இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௧௩௮

எந்தனுக் கிசைந்த மனையாளே — வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே ௧௩௯

வந்துவெகு நேரமா குதடி—யெந்தன்
மாதுதெய் வானையெனத் தேடுவாள்நாடி ௧௪௦

போய்வாறேன் விடைதாடி யென்ன - வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௧௪௧

வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு - நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு ௧௪௨

அங்கேபோய்செலுத்துமதி காரம்-யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௧௪௩

இங்கோரண்டு நாளிருந்து போனால் - சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனால் ௧௪௪

என்மனையி லிருக்கையிலே யவளேன் உம்மை
யேன் தேடவேண்டியது சுவாமிநீர் சொல்லும் ௧௪௫

குணமாக முன்னீடுவைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலேமெத்த ௨௧௮

இதுபுதுமை யிவ்வுலகிலுண்டோ - வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ ௨௧௯

கதிகொண்ட மயில்வா கனத்தார் - இந்தக்
கதைசொல்லவே வள்ளியவ ளெதிருரைத்தாள் ௨௨௦

குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ் - சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும் ௨௨௧

மறந்தீரோ நீரறிந்த திலையோ - னொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலையோ ௨௨௨

சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி - உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்ததுக்குச் சாட்சி ௨௨௩

நந்திகேசு பார்சொல்லக் கேட்டேன் - சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்லமாட்டேன் ௨௨௪

ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார் - உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫

கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ - ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்ததும்பொய்யோ ௨௨௬

கண்ணுயிரங்கொண்ட நேத்தி - னொம்மான்
பெண்ணாசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர் கொடுக்காத தேதினால் - னொண்ணன்
பெருவயறு கொண்டுவெழுக் கரையிலிருந்ததினால் ௨௨௮

அண்ணனுமே மத்தளங் கொட்ட — சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள்கூடியே நகைக்க-வந்த
வேதியரும் மாதவரும் கண்டுபிர்மிக்க ௨௩௦

தேவடியாள்போலுமது வண்ணை - கூடுந்
தேவசபை யிலேனின்று ஆடலையோமுன்னை ௨௩௧

பாவலருக் கருள்புரியுஞ் சீலா - யிதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்கவடிவேலா ௨௩௨

பத்மாசூரனுக்கு மிகப்பயந்து - உங்கள்
பரமசிவ னோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩

கைப்பொருளு மில்லாமல் தேகி - யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪

கும்பமுனிக் கருள்புரிந் தோரே - யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்யானையென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி ௨௩௬
குதிகொண்ட வனக்குறவச்சாதி-வகையை
கூறிந்துசொல்லுகிறேன் கேளுமவர் சேதி ௨௩௭
சதிர்பெருகுந் திருவிழாக்கடையில-ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில் ௨௩௮
கூசாமல்கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல்பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௩௯
பேசாமலோடுவது கண்டுகுறத்தி
பெரியதனக்காரர்களுமேபிடித்துக்கொண்டு ௨௪0
வம்பிலேதலைமயிரைக் கட்டிகுறத்தி
மார்பிலேபோடுவார் சொல்லென்றுகிட்டி ௨௪௧
செம்பாணிகொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையையுரிந்தம்மண மாகவேவிறுத்தி ௨௪௨
அடிதண்டமாகவே யடிப்பார்-குறவர்
அப்பவுமெடுக்கவில்லை யென்றுமேதுடிப்பார் ௨௪௩
தடியடிக்கிசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டுநிர்ப்பார்கள் தெரியுமவர்சேதி ௨௪௪
என்றிவருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வாளப்போது ௨௪௫
தொண்டர்தொழுநின்றடியிலேநாஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப்பாரும் ௨௪௬
அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள்கூடிவரு மாய்ப்பாடிவாழும் ௨௪௭
இடையருடவளவிலெங் ஞளும்-உறியி
லிருந்தவெண்ணைதிருடினதை யாரென்றுகேளும் ௨௪௮
அன்றுடனசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறால்வரிந்து ௨௪௯
ஒன்றாக மாதரொருபக்கங்-கூடி
உரலோடேகட்டினதைச் சொன்னாலுங்வெட்கம் ௨௫0
கட்டுண்டதும்ரோஷ மிலையோ-பெண்கள்
கட்டியசேலைகளைக் களவாண்டதிலையோ ௨௫௧
வெட்டியசமர்க்களத்தி லேறும்-கிருஷ்ணன்
விஜயனுடைகுதிரைகளை மேய்க்கலையோபாரும் ௨௫௨
ஊத்துகிறகஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலிமாட்டையெல்லாங் கூட்டியங்கே மேய்த்தார் ௨௫௩

கூத்தடிக்கமுண்டின்னம்ரெம்ப-சொல்லக்
கூசுமேதேயென்மனமூ மென்றிவளியம்ப ௨௫௪
கேட்டவடிவேலர்கைநீட்டி-வள்ளி
கேளடியுங்களுடை வீடுமலைநாட்டில் ௨௫௫
நீட்டமிருகால்களை யிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாகவலைகூட்டியேயொருத்தி ௨௫௬
நத்தியகயற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாமல்மூங்கிலிலை யாலமேய்ந்தகுச்சு ௨௫௭
சுத்திவைத்தசுவரெல்லா மோட்டை-யசந்து
தூங்கவும்விடாதங்கே மூணுமூணுததமூட்டை ௨௫௮
ஆடேறிமேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர்தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯
மூடாதவாசல்களைக் கண்டு-பார்த்து
மூடினுலுசரவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௰
தேடாதபொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந்தெரியாது தோணுமல்தோணுங் ௨௬௧
கூடாது குறவீட்டைநம்ப-சற்றே
குந்தவைக்கமுடியாது நசுநசுப்புரெம்ப ௨௬௨
குறம்பாடிக்கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவருடபக்கியெல்லாங் கூரையிலேதூங்கும் ௨௬௩
வரம்பேதுமில்லையென் றுளும்-யென்று
வடிவேலர்சொல்லவே வள்ளியின்னுளும் ௨௬௪
தமக்கென்றுசிறுகுடிசைகட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி ௨௬௫
உமக்கொருதலத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி ௨௬௬
கையிலரைக்காசுமே யில்லாமல்-வீடு
கட்டியேகுடியிருக்க வகையுமறியாமல் ௨௬௭
வெய்யலிலும்வேனிலிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்கனிந்து ௨௬௮
இருப்பதுவைக்கண்டுமனம் வாடி-உமக்கு
யிவ்வுலகிலுள்ளவர்க ளெல்லோருங்கூடி ௨௬௯
சிறக்கவேகோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணியாபரணம்விருதுகள்சமைத்து ௨௭௰
வடிவேலவாவென்று வெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி ௨௭௧

அடியவர்கள்புண்ணியமீ தையாநீரும்
அழகானகோவில்களிலிருக்கிறதுமெய்யா ௨௭௨
தேருமதகரிபரியு மிரவல்-எமக்கு
ஜெயமேள பேரிகையுங்கோவில்களுமிரவல் ௨௭௩
ஏறுமயில்வாகனமு மிரவல்-உமக்கு
பிட்டநவரத்னமணி யாபரணமிரவல் ௨௭௪
இத்தனையுமுமக்கிரவல்தானே-குறவர்
இருப்பிடத்தைப்பழிக்கிறீ ரென்னமல்வினை ௨௭௫
வெற்றிவேலதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொருஆஸ்திகளின் மேலென்னசொந்தம் ௨௭௬
மச்சமுனிமறைபொருள்களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச்சொன்னாரேகேளும் ௨௭௭
மச்சானேமறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்தவொருமாமனே அளவளந்ததாதன் ௨௭௮
ஆத்தாளோபாருருப்பறச்சி-அவளுக்
கருமையுள்ளதமையனையும் வளர்த்தவளுமிடைச்சி ௨௭௯
தாத்தாவோமீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்தனானவனும் நல்லகுலமரவன் ௨௮௦
ஆறுமொன்றுமையீன்ற தய்யாசங்க
மாண்டியல்லோசாதியிலே சொல்வார்கள்மெய்யா ௨௮௧
வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் ௨௮௨
இதற்குமுன்னேநானறிந்தாலும்-உமக்கு
இசைவேனோநீர்குட்டிக் கரணம்போட்டாலும் ௨௮௩
அதற்கென்னசெய்யலா மையா-நாங்க
ளானாலுங்குறச்சாதி யென்பதும்பொய்யா ௨௮௪
பண்டாரமநானென்று கத்தி-யெந்தன்
பரனேதிரே வந்தீரே யதுவென்னபுத்தி ௨௮௫
கொண்டுகுலம்பேசுவது போச்சோ-சுவாமி
கொய்ததினைமாவுக்கென்னை கெஞ்சினதும்போச்சோ ௨௫௬
பேருதெரியாமலுருமாறி-வந்து
பிசகுசெய்தமாதரிவி ளேமதமீறி ௨௮௭
பாரமதயானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாக மாட்டேனில்லாவிட்டால் ௨௮௮
வழகியிந்தாடிகுறவஞ்சி-யென்று
வனவேடன்போல்வந்து யென்னெதிரேகெஞ்சி ௨௮௯

மன்னவர்பிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனையுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬
யெனக்குரியமானே நீ கோபம்-இப்போ
யென்பேரில்வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭
உனக்குநாலபிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைதன் செய்யாதே நான்மறப்பேனோ ௩௨௮
யோய்வாறேன் வள்ளி நயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடிதெய் வானையிடமேக ௩௨௯
வாய்திறந்துசொல்லுமனமகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேழ்க்கவே வள்ளியுமுகந்து ௩௩0
மறைபுகழுகின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா ௩௩௧
இறையவருக்குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்லவேலர்வழி கூடிநடந்தாரே ௩௩௨
சித்திரவடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்ததாதியர்கள் கண்டடிபணிந்தார் ௩௩௩
வெற்றிமயிலோனன்பு கொண்டுகோவில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪
மங்கையரேயெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குப்போனேன் ௩௩௫
செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினதுமென்னவகை சொல்லாயோபெண்ணே ௩௩௬
தெய்வானையென்றார் துணிந்து அந்த
தேவிசெவ்வேள்பாத மலரடிபணிந்து ௩௩௭
வைபோகமானவடிவேலே-உடைய
மணவாளா உமக்குநிதமிதுதானேவேலை ௩௩௮
இளையாளமேலிருக்கிற பாசமே-சுவாமி
யென்பேரிலேயில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯
அழையாதவிருந்தோ நீர்காணும்-வள்ளி
யவன்மனைக்கிநிதம்வலியப் போகவோவேணும் ௩௪0
முழுக்கவேயும்மாலே யேச்சே-சாதி
முறைதவறிக்குறவருடசம்பந்த மாச்சே ௩௪௧
இழுக்கான சாதியிலே-மாலை
யிட்டாலுமென்னைப்போ தருவாயோயோகி ௩௪௨
அடிக்கடி நீயவள்மனைக்குப் போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால் ௩௪௩

குடிதனிலுயர்த்தவளு மில்லை-வள்ளி
குறவர்குலமானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪

நிசமென்று நீரென்னுவீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுடமோகமதவீரோ ௩௪௫

ஆசையாம லானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீ ரேனுமக்குப்பாரி ௩௪௬

யாகிநானெடுத்ததென்னகோட்டை-புவியில்
அரியாரோநீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭

தேகியெனவாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியவள் தினைமாவை தின்கவேபோனீர் ௩௪௮

திரிபுவனையருள்பெற்றபாலா-உமது
சித்தமதுவெப்படி கதிரைவடிவேலா ௩௪௯

அரிமருகரேயென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன்சொல்லுவார் தெய்வானைமெய்க்க ௩௫0

மானேநானுன் வுறுதிபெற்றேன்-பின்பு
வள்ளிதனைமாலையிட்டுகூட்டி வந்துவைத்தேன் ௩௫௧

தேனேயென்மேற்பிழைகளில்லை-உனக்கு
தெரியாதோவீணில் பேசுவதுதொல்லை ௩௫௨

கோவிலுக்குநீபோடியென்று-யெங்கள்
குமரேசன்சிம்மாசனத்திலேயென்று ௩௫௩

சேவலொருகையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடிவேலவரு மேகொலுவிருக்க ௩௫௪

சூடதீவாராதனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள்கோடானு கோடியன்றைக்கி ௩௫௫

அடியவர்பணிந்துதுதிபாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட ௩௫௬

சிம்மாதனத்திலிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயெனவந்தவர்கள்சூழவேபெருக்க ௩௫௭

அம்மாபரஞ்சோதிபாலன்-நல்ல
அன்புடனருளுவா ராறுமுகவேலன் ௩௫௮

துன்பவினையணுகாமல் தானே-நீங்கள்
சுகமாகவாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௩௫௯

தென்கதிரைவேலரருளாக-வந்த
தேவர்களுமனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௩௬௦

சித்தர்களும்வந்துசிதம்பணிய-யிந்த
செந்தமிழ்தனக்குதவி செய்சுப்பிரமணிய ௨௬௧

கர்த்தனருளாலேகுறைவில்லை-ஆருங்
கதிர்காமமென்றாலும் வறுமைசொல்லுமில்லை ௩௬௨

தேவர்களுமுனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலுமயனாலு மும்மையாளும்வாழி ௩௬௩

நாவலரும்பாவலரும்வாழி-வள்ளி
நாயகன்மேற்கவிபி தென்னருளும்வாழி ௩௬௪

புள்ளிமயில்வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும்நகரத்தார் புகழ்பெறவேவாழி ௩௬௫

வள்ளிதெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி ௩௬௬

கதிரேசன் ஆனந்தக் களிப்பு

முற்றிற்று.

உ

சிவமயம்.



கதிர்காமத்துயேசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
    சித்திவினாயகனை யெண்ணியே-வாலை
    சத்திசிவனைத் துதி பண்ணியே ௧

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
    தாளிணை தன்னைமற வேனே-கந்த
    வேளெனுமெங்கள்முருகோனே ௨

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
    கும்பன் குருவைப்பணிந் தேற்ற-வெகு
    யின்பமுடனேகதை வாழ்த்த ௩

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
    யெங்குலதேவனருள் சேரும்-இந்த
    தென்கதிர் காமமதைப் பாரும் ௪

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
    சேவலக்கொடிதுலங்கும் தோகையர்-இந்த
    மாவளமாநகரிலத் தானையா ௫

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வள் யோகனடி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி. ௫௬

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு ௫௭

சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேனி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோனும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகலமாட்டார்-மாயன்
செந்திருவால்கதிரை நாட்டார் ௬௦

நட்டாரடியவர்மேல் நட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்செல் வாரோ-நாமும்
கேட்டவரங்கள் தருவாரோ ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருக னுக்கே-யெண்ணி
வாசமாய்நம்பிடந் தோர்க்கே ௬௨

வசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி-யினி
கூறும்ஜெயமங்கள வாழி ௬௩

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி ௬௪

கதிர்காமத்து ஏசல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமேல் ௧

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாமே
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே ௨

சுந்தரரீரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர்களைப்போற்றி ௩

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்யவேணுமம்மாநாளும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா ௪

கந்தன்கதிர்காம வேலனேபுவி
கார்க்குமறைமுத லோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ௫

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்ககெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி ௬

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி ௭

உண்மையெனக் கின்னதென்று தானே - சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே கசசு

இங்கேவந்து நானிருப்பதாலே - யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானையொருக்காலே கசஎ

மங்கையருந் தேடுவா ளின்று - யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று கசஅ

இவர்கூறவள்ளிமின்னுளே - சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நானே கசகூ

அவசர மூமக்கென்ன யெங்கே - சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே நிங்கே கருய

கூடாது உம்மைவிட மாட்டேன் - மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் கருக

தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் கருஉ

பார்த்தே தடிவள்ளி மானே - சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே கருங

ஆத்திர முனக்கென்ன போடி - தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி கருச

சொந்தமாய் கிருபை பாராட்டி - அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி கருரு

வந்தபடி யாலவ ளுனக்கு - முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு கருசு

அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம் - வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம் கருஎ

மடற்கொடி தெய்வானையவ ளிங்கே - நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே கருஅ

போகவிடை தாவென வதட்ட - யெங்கள்
பூவை யெனுங்குறமாதுக் கதிகோபமுட்ட கருகூ

மானக மேடையி லிருக்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் கசுய

தெய்வானை சொந்தமாய் போச்சோ - நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ கசுக

கைமாயஞ் செய்தோமோ நாங்கள் - ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்தீரோவுங்கள் கசுஉ

சாதியா ரேசுவா ரோகாண் - நீருந்
தலைமறைய யென்மனைக்கி வருவானே யேன்காண் கசுங

ஆதியிலே யெனையு நினைத்து - வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமறைத்து ௧௬௪

கூட்டிவந்த நாரதரைக் கேளும் - வனத்தில்
குளத்தருகி லேயிருந்த கரடிபுலிவாழும் ௧௬௫

காட்டினி லுமக்குதவி செய்தார் - வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௧௬௬

சிவதலங்கள் செயசபைமுன் னாலே - வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௧௬௭

அவள்மாத் திரஞ்சொந்தக் கிளையோ சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு மூகமிருக்கவில்லையோ ௧௬௮

வள்ளியிவை சொல்லவே திகைத்து - சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து ௧௬௯

கள்ளிபோல் வீணிலிரை யாதே - பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே ௧௭௦

ரெண்டுசமு சாரமா காது - யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௧௭௧

வண்டர்குல மானேயுனை நாடி - வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி ௧௭௨

நில்லுநான் போய்வாரே னென்று - சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சீறியெதிர்நின்று ௧௭௩

வல்லப முமக்கென்ன காணும் - எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௧௭௪

என்சமர்த்தைப் பாருமினி யென்றே - வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே ௧௭௫

அன்புற நெருங்குவது கண்டார் - வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் ௧௭௬

சொல்லுகிற சமாச்சார மென்ன - உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துமினி யென்ன ௧௭௭

நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம் - உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிக்கேழ்ப்போம் ௧௭௮

தேவசபை யிலேசொல்லிப்பாரு - அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு ௧௭௯

ஓவியமே உன்னுறுதி கேட்க - யெழுதும்
உடன்படிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௧௮௦

உடன்படிக்கை முறியெழுதித் தாறேன் - வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௧௮௧

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடி யிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி ௮

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக்கொண்டாடவே
யேதுபிழையிருந்தாலுஞ்சுவாமி
ஏழைக்கிரங்கியெனையாளும் ௯

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளுங்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றியகாலுடையான் ௧௦

சத்திக்குகந்த மகன் றானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்றானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி ௧௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்செந்நெல்
அள்ளியவலெங்கும் தூத்தினர் ௧௨

செந்நெல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும் ௧௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில் மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும் ௧௪

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும் ௧௫

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே ௧௬

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். கஎ

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும் கஅ

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர். க௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னனரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள் உ0

புத்துமதத்திலுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும். உக

தெய்வானைக்கொத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. உஉ

யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. உ௩

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டிஅந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. உ௪

சிறப்பைச்சொன்னவ ரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

பிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனால் நடந்தோணும். ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந்தானுமையா அந்த
உண்மையாய்சொல்லவும் வேணுமையா. ௨௬

சொல்லுகிறேன்கேளடி மின்னாளேதேவர்
சொன்னசப்தத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮

ஏறுசுற்றுக்கோட்டையாக்கியே யிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டருபோனுக் கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௦

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான், ௩௧

சீதையினாலே மனமுகந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி. ௩௨

பரப்பிலேபத்து யோசனையாம்கவிப்
படைமலைகொண்ட தற்கிணையாய்
ஊரத்துயோசனை நூறுமட்டும்அணை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும் ௩௩

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பொருமையால் கொஞ்சம்போராக்கி
அன்னாள்விபூஷண னுண்டுவிட்டா பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணுலேலெங்கை
நகரம்நாள்சென்று பின்னுலே
கோட்டையழிந்து கடலாச்சுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாட்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிகுந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்இதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும். ௩௮

நத்தியேநாகர் சிலகாலம்மேல்
நாட்டையாண்டுவருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி ௪௦

தலைமன்னாரென்று பேட்டைக்கட்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர்மகள்கூட. ௪௧

செப்புமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசாடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி. ௪௨

வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்யிந்து
மதசமையத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைந்தரசரு மீறினார் ௪௩

சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க. ௪௪

பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யசண்டை யிட்டுக்கொண்டார் ௪௫

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டியந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு ௪௬

உன்னிதமான மலையுமுண்டியிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம். ௪௭

கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம்சிவ
நாதனுகந்தகோணேஸ்பரமாம். ௪௮

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமரபுரம்புக
ழிலங்கும்சந்திர சேகரபுரம். ௪௯

கண்டவர்மொய்த்த மாவிட்டபுரம்ராஜ
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதம். ௫0

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமுன்னே
　ராமனாதனாலமைந்ததடி
பூமிக்குறித்தான மன்னர்மெத்தபட்டம்
　பூண்டரசிட்ட நகரமெத்த. ௫௧

கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
　கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவையொல்லாம் கட்டடமாம்கோட்டை
　அனுராசபுரபட்டணமாம். ௫௨

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
　முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
　ரெத்தின மணிகள் விளைவதுண்டு. ௫௩

பன்னகாமம்தும் பறைநாடாம்பாழ்ப்
　பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லையிப்ப
　யெனக்குச்சொல்லச் சமையமில்லை. ௫௪

கண்டவிடமெல்லா மூராச்சுகோயில்
　கட்டியக்கட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
　சிங்களரோடர சாண்டார்கள். ௫௫

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
　கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
　தலைமுறைவரை ராஜர்களும். ௫௬

தொண்ணூத்தாறுமுடி மன்னரடிஅதைச்
　சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
　மேவியரசிட்ட பேரவரில். ௫௭

கண்டியரசனும் பின்னாலேஅவன்
　கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க்காரனடி அவன்
　வம்மிஷம்நாய்க்க ராஜனடி. ௫௮

அதற்குமுந்திய ராஜர்கொடிக்கட்டி
　ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு

மதிப்பதற்கிடந் தோணுமலைக்காடு
மண்டியிருப்பதும் தானுமே. ௫௯

இங்கிர் தன்விரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
தங்கையுடனர சாளையிலேசீமை
தன்னிலிருந்திந்த வேளையிலே ௬௰

சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிகாம் தனைவகுத்துப்புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்து. ௬௧

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. ௬௨

தொட்ட திருக்கோண மாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்த்தள்ளி விரைவாகிவந்து
உலாந்தாக்காற ருசாராக. ௬௩

ஆண்டுசில்காலம் விட்டார்கள்பின்பு
ஆஙகிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த. ௬௪

கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிஞற்றூர்கோடு
வங்காளச்சேரி கட்டலுற்றூர். ௬௫

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெரும்
கள்ளர்களைச்சுட்டு யறுத்திட்டார்
வண்டிக்கிறோட்டுகளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி. ௬௬

துறைமுகங்களை நோக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்ரேகு
நிறைந்ததீர்வைப் பணங்களும். ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபிசை மூந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னாசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னாசே. ௬௮

பூட்டிறயிலேயும் நடத்திஞர்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்திஞர்
தாஷ்டிகமான கடலேக்கியூட
தடுத்தணேகட்டியேநெருக்கி. ௬௯

தண்டவாளச்சூட்சம் வைத்தாரேமலேத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. ௭௦

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம்பிந்தியா
சக்கரவர்த்திபட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளேப் படிநடத்தும். ௭௧

இங்கிலீஷ்காரரா லேயல்லோநம்ம
இந்தியாவும்லெங்கைத் தீவுமல்லோ
சங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன்றுமில்லேயே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும்கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டுமின் னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணேவர்ன்ன
கோல்விழிக்கயல்க் கண்ணரே. ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேதா யுகத்திலே

கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே. எசு

பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட எஎ

வாசமுள்ளவீர நாளையிலேஅவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவீடு மிதில்காண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி. எஅ

குன்றெனும்வீரரைத் தூக்கினார்தேவர்
கோனுக்காசையுண் டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி எகூ

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்றேபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தகம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. அ0

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவ ரைவாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. அக

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தை பாருங்கடி. அஉ

மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்னதமண்டபம் தோணுமே
சிலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா. அ௩

திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
மூன்மணிவாசலுந் தோணுது. அச

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
நானறியவகை சொல்லுமையா. அ௫

நானுமறிந்தது மில்லையடிசொன்னால்
நம்புவையோயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோனுட்டல்கந்தன்
சேருவை காணமுடியாது. அ௬

சேருவைகாண முடியாட்டால்யிதைச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆறுக்கலங்காரம் செய்வார்கள். அ௭

ஆருக்கென்றால்வர்ணப் பேளையொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. அ௮

பவனிவந்திடும் பேளையதுயென்ன
பாவினையாகவே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேளைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். அ௯

அருள்நிறைந்தது சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறிவறிந்து துலகாட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯௰

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி. ௯௨

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. சுங

அறிந்ததுண்டைய னுத்தராவால்பண்ணி
ராண்டுக்கொருதர மாத்திரவர்
உரியசுத்தமவுனங்கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு. சுச

கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
கொலுவின்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைவேந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண். சுரு

சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி. சுசா

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனாலவரெப் படிபோனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண். சுஎ

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னால்தாண்டி
யேகினாலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையதோனு மிருள்விலக்கி. சுஅ

யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ. சுகூ

விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலவனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம். எ

நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள் கூட்டமதிகமுண்டோ. ௱௧

அவர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாதே மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே. ௱௨

தோணுதென்றது மெய்யவரும்மிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௱௩

கண்டுதொழுவ தெல்லாமலையுமெங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லைஅங்கே
துடிவயிரவன் காவலடி. ௱௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குவதை. ௱௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்குமுந்தி
ராஜூரால்கட்டிய கோவிலடி. ௱௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௱௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி. ௱௮

திணைதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேல்வன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டின தார்காணும். ௱௯

கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுசந்ததர்மம் மடம்சமைத்தார். ௱௰

உசந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௱௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு. ௱௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௱௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தாலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமித்திருவிழா கூட்டமடி. ௱௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன. ௱௧௫

வளமைமேவழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி ௱௧௬

கந்தனுக்கேர்த்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௱௧௭

தேருமேலேறும் வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீரறுப்பானதைப் பாருங்கடி. ௱௧௮

நீரறுப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்னாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா, ௱௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யலிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீயுரைப்பாயென்பதும் மெய்தாண்டி. ௱௨௦

மெய்யானஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௱௨௧

முத்தியுண்டுநினைத் தாலுமடிதவ
முத்தர்மகிழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன். ௱௨௨

கேசவன்தன்னருமைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்சொன்ன
வாசமிகுந்த தமிழதனைச்பெரிய
மன்னவரே யுமக்கெந்தவூரு. ௱௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகராம் திருப்புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டித்தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௱௨௪

பேரையும்ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீருந்
தானிங்கேவந்த வயணமென்ன. ௱௨௫

வந்தூகொழும்பதனில்ச் சிறந்துவெகு
வாலமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணுலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி. ௱௨௬

கைதொழுதேற்றிய மெய்வாசன்நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா. ௱௨௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்று மிப்பாடவர்க்கும்
இல்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால். ௱௨௮

அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். ௱௨௯

தீராதநோய்தனை தீர்த்தவண்டி சுவாமி
சித்தம்வைத்துநம்மைக்காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனிவன். ௱௩௦

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரசேவல் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி. ௱௩௧

சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
யிம்மானிலத்தவர்போற்றியேஅவ
ரெண்ணிவந்தபடி நேத்தியே. ௱௩௨